

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி 27வது மற்றும் 28 வது வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு கண்டு அதற்கு உண்டான சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினார் அப்பொழுது மேயர் க. வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் மாமன்ற உறுப்பினர்கள் மகேஸ்வரி கார்த்திகேயன் ஜி. விஜயலட்சுமி மாநகராட்சி துணை ஆணையர் பல்வேறு துறை அதிகாரிகள் வட்டக் கழக செயலாளர்கள் டீ. கன்னியப்பன் காமேஷ் ரங்கநாதன் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்



தமிழ்நாடு அரசின் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம், சென்னை, அண்ணாநகர் மண்டலம்–8, 106வது வட்டம் பகுதியில் நேற்று (9.09.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், திமுக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டக் கழக செயலாளர்கள் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், இரா. நவீந்திர குமார், தெ. கருணாநிதி, வி.எம் சிவா, வெ.சண்முகம், மாநகராட்சி மண்டல அதிகாரி சுந்தர்ராஜன், ரமேஷ் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு, தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

### மதுரை வடக்கு – தெற்கு மாவட்ட திமுக சார்பில் – மதுரை விமான நிலையத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி – மு.மணிமாறன் அறிக்கை !





மதுரை, செப்.10-

மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் பரமக்குடியில் நடைபெற உள்ள தியாகி இமானுவேல் சேகரனார் நினைவு தின நிகழ்வில் பங்கேற்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் நிகழ்வில் மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதன் விபரம்

விடுதலைப்போராட்ட வீரர், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 68 வது நினைவு தினம் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் 11.09.2025 அன்று நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நினைவிடத்திற்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளார்.

இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமான மூலம் மதுரைக்கு இன்று 10.09.2025 புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் மதுரை விமான நிலையம் வர உள்ளார்.

எனவே மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் சிறப்பான வரவேற்பு கொடுக்கும் வகையில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கையில் இருவண்ண கொடியுடன் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் – ஆலந்தூர் தொகுதிகளைச் சேர்ந்த

# 6,501 நபர்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

காஞ்சிபுரம், செப்.10

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் - ஆலந்தூர் தொகுதிகளைச் சேர்ந்த 6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்குகிறார்.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் விழா இன்று 10-ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் குன்றத்தூரில் உள்ள சேக்கிழார் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் டி.ஆர். பாலு, காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் க.செல்வம், திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கு. செல்வப்பெருந்தகை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

கழக இளைஞர் அணி செயலாளர் - மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு 6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களையும், 283 பயனாளிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

குறு - சிறு - நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை ஆற்றுகிறார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் நகராட்சித் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, மாங்காடு நகராட்சித் தலைவர் சுமதி முருகன், திருப்பெரும்புதூர் நகராட்சித் தலைவர் சாந்தி சதீஸ்குமார், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் மாலதி டான்போஸ்கோ, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், குன்றத்தூர் நகராட்சி துணைத் தலைவர் தே.திருநாவுக்கரசு, திருப்பெரும்புதூர் நகராட்சி துணைத் தலைவர் இந்திராணி சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ் நன்றியுரை கூறுகிறார்.

### மெட்ராஸ் கோல்டன் சிட்டி அரிமா சங்கம் சார்பில்

# கிண்டியில் ஆசிரியர் தினவிழா!

### துணைவேந்தர் எம்.கிருஷ்ணன் – தொழிலதிபர் முரசொலி சிங்காரம் பங்கேற்பு!

சென்னை, செப். 10 -

மெட்ராஸ் கோல்டன் சிட்டி அரிமா சங்கம் சார்பில் ஆசிரியர் தின விழா 07.09.2025 - ஞாயிறு காலை 10.30 மணியளவில் சென்னை, கிண்டி, சர்தார் பட்டேல் சாலையில் உள்ள ரமடா பிளாசா 5 ஸ்டார் ஹோட்டல், வேந்தர் ஹாலில் நடைபெற்றது.

இவ்விழாவில் திருவாரூர், மத்திய பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் எம். கிருஷ்ணன் பங்கேற்று ஆசிரியப் பெருமக்களுக்கு நல்லாசிரியர் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில் முனைவர் சாமி. சத்தியமூர்த்தி, லயன் ஆர். புவேனந்திரன், எம். சண்முகம், ஜி.ஸ்ரீகாந்த், எம். பன்னீர் செல்வம், எஸ். இளங்கோ, ஜி. மோகன், தொழிலதிபர் முரசொலி சிங்காரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் லயன் பி. சார்லஸ், கே. முத்து, ஜி. வெங்கட சுப்பிரமணி யன், எம்.பன்னீர் செல்வம், எஸ். இளங்கோ, ஜி. மோகன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

விழாவில் நாகை மாவட்டம் தாணிக் கோட்டகம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முதல் 3 இடங்களைப் பெற்ற பிளஸ் 2 மாணவர்களுக்கு தொழிலதிபர் முரசொலி சிங்காரம் ரொக்கப் பரிசினை வழங்கினார்.

கோல்டன் சிட்டி அரிமா சங்கத் தலைவர் பி. சார்லஸ், சென்னை முகப்பேர் பாரதி வித்யாபாலயா பள்ளியில் பத்தாம் வகுப்பில் முதலிடம் பெற்ற பி. நேஹா என்ற மாணவிக்கு ஓராண்டு கல்விக் கட்டணம் ரூ. 60,000 ரொக்கப் பரிசு வழங்கினார்.



தாம்பரம் மாநகரம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பகுதி கழக செயலாளர்கள், ஒன்றியசெயலாளர் கலந்தாலோசனை கூட்டம் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர் ஆ.நடராஜன், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.கே.ரவி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக அவைத் தலைவர் டி.ஆர்.கோபி, தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனை வழங்குகிறார்!

# திருவல்லிக்கேணி பகுதி நிர்வாகிகள் - வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, செப். 10 -

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ. ஆர்.பி.எம்.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (10.9.2025 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில், பகுதிக் கழக அலுவலகம், எண். 28 / 20, கஜபதி பேகம் தெரு இராயப்பேட்டையில் நடைபெறுகிறது.

பகுதி அவைத் தலைவர் ம.தயாநிதி தலைமை வகிக்கிறார்.

வீ.பி.பொன்னரசு, ஆர். என்.துரை, அ.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ. இளம்பாரதி, கமலா செழியன், ரவி ராஜ்குமார், எம். கே.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே இக்கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில்

# 23 'அ' வட்ட இளைஞரணி கே.ராஜேஷ் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### வீரா.குப்பன் வரவேற்புரை! புழல் எம்.நாராயணன் முன்னிலை!

சென்னை, செப். 10-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் 23-வது வட்ட இளைஞரணியை சார்ந்த கே. ராஜேஷ் தங்கை கே. பவித்ரா - எஸ்.எழிமன் திருமண வரவேற்பு விழா 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் டிவிங்கிள் பேலஸ் ஏசி மஹால், புழலில் நடைபெறுகிறது.

இதில் சென்னை வடகிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும், மாதவரம் எஸ். சுதர்ஸனம் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்குகிறார். பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் முன்னிலை வகிக்கிறார், வட்டக்கழக செயலாளர் வீரா.குப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் துரை சந்திரசேகரன், மாதவரம் மண்டலக்குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் விஜய் ஆனந்தன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விசிக மாவட்டக்கழக செயலாளர் சி.நீலமேகம், மாமன்ற உறுப்பினர் ராஜன் பர்ணபாஸ், டி.ஜிங்கா, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர், எச்.பீர்முகமது, வழக்கறிஞர் இரா. திராவிடடில்லி.

கே.அங்குசாமி, மாதவரம் வடக்குப்பகுதி வட்ட செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே.கருணாகரன், மாத்தூர் க.தாமரைச்செல்வன், பி.எஸ்.சந்துரு.

வட்டக்கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், பொ.அறிவழகன், உசேன் மைதீன், பி.சுதாகர், எம். அம்மு, முத்துக்கிருஷ்ணன், டி.பார்பன், அப்துல்சமது, வி.அரி, பார்த்திபன், டி. ரமேஷ், ஜி.அன்பழகன், வி.ஆர்.கே.ஜவஹர், எ.சேகர், எம்.சுரேஷ், ஜி. வினோத், டி.எழில்குமார், விக்னேஷ்வரன், டி.ராஜாராம், உ.மேக்ஷினி, சொ.சரவணன், டி.நெல்சன், க. சிவக்குமார், க.ந.க. சைமன், வே.ரவி, எஸ்.முத்துவேல், டி.லாரன்ஸ், எஸ். கலைச்செல்வி, எம். அமுதா, ஆர்.சுதா, ஜெ. யுவராணி, வைலட் ராணி, ஜெயபாரதி, எஸ்.சுதா, சசிகலா மற்றும் கழகக் தோழர்களும் முன்னோடிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நன்றியுரை:- 23 அ, வட்ட இளைஞரணி கே.ராஜேஷ்

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, விழுப்புரம் மத்திய ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

#### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - ம. ஜான் வல்தாரிஸ் 11, பெரியார் நகர், அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. செந்தில்குமார் 5/78, பிச்சம்பாளையம், சக்தி தியேட்டர் ரோடு, திருப்பூர் - 641603. 2) ச. தாரிக் முகமது 6/112, மங்கலம் ரோடு, திருப்பூர் - 641654. 3) சா. மகிழவன் 3/143, சி.எஸ்.ஐ. வீதி, கருவலூர், அவிநாசி - 641670, திருப்பூர் மாவட்டம். 4) எம். முஷாபர் அகமது 1/1180, அழில் நகர், நெரிப்பெரிச்சல், திருப்பூர் - 641666. 5) ஜெ. பிரவீன் ஜோசப்ராஜ் 186ஏ, சி.எஸ்.ஐ. வீதி, பெருமாநல்லூர், திருப்பூர் - 641666.

#### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - **கே.ஆர்.சபியுல்லா,** நகராட்சி பாடசாலை, வடக்கு வீதி, சத்தி.

துணைத் தலைவர் - எஸ்.பி. முஜிபுல்லா, 38. நகராட்சி பள்ளி வடக்கு வீதி-1 சத்தியமங்கலம். ஈரோடு மாவட்டம்

அமைப்பாளர் - சி.ராஜேந்திரன், 1/83, சி.எஸ்.ஐ.தெரு கடுக்காம்பாளையம்(அ), கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) அ.நாசர், 214, முல்லை நகர், நல்லூர் அஞ்சல், புளியம்பட்டி. 2) மு.தஸ்தகீர், 7, அம்மன்நகர், நல்லகவுண்டன்பாளையம், லக்கம்பட்டி, கோபி. 3) ஜி.எஸ்.தீலிப், 33, சாரதா மாரியம்மன் கோவில் தெரு, கோபிசெட்டிபாளையம். 4) எஸ்.யாகூப், புஞ்சைதுறையாம்பாளையம், பங்களாபுதூர், டி.என். பாளையம். 5) ஞா.அசோக் மேசாக், 4/559, கவிதா நகர், எஸ்.பி.நகர் அருகில், கோபிசெட்டிபாளையம்.

#### விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - **எஸ். தாகீர்** 26, ஏரிக்கரை தெரு, ஆர்.ஆர். நகர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - பி. தோமினிக் 21/1, சேவியர் தெரு, விழுப்புரம்.

அமைப்பாளர் - டி.என்.ஏ. தமின் 2, பாண்டி - விழுப்புரம் மெயின் ரோடு, நவமால்காப்பேர், தென்னல் அஞ்சல், கண்டமங்கலம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.ஆர்.எஸ். அசாருதீன் 49, வ.உ.சி. தெரு, விழுப்புரம். 2) அ. அன்வர்பாஷா 4, குத்துவாபு தெரு, கோட்டக்குப்பம், வானூர் வட்டம். 3) நா. ஹென்றிதாஸ் 456, அன்னை இந்திரா நகர், திருச்சிற்றம்பலம் கூட்ரோடு, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

4) எஸ்.கே.எஸ். முகமது அலி 38/14, கைவல்லியர் தெரு, விழுப்புரம். 5) எஸ். லூக்காஸ் செங்காடு கிராமம், விழுப்புரம் வட்டம். 6) எம்.ஏ. ஷாருக் அகமது 33, முகமதியார் தெரு, மந்தக்கரை, விழுப்புரம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09-09-2025.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# ஆதிதிராவிடர் நலத்துறை - டாக்டர் அம்பேத்கர் விருது!

சென்னை, செப். 10–

தமிழ்நாட்டில் பட்டியல் இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். பட்டியல் இன மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக்கொண்டு அவர்கள் ஆற்றிவரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2025 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். HTTPS://CMS.TN.GOV.IN/CMS_MIGRATED/DOCUMENT/FORMS/ANNALAMBEDKAR_AWARD_APPLNFORM_T_290824.PDF (OR) HTTPS://TINYURL.COM/AMBEDKARAWARD என்ற இணையதளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகம், சென்னை05 அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.



விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்காணல் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. கடலூர் மண்டல பொறுப்பாளரும் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் முனைவர்.சி பிரதீப் நேர்காணலை நடத்தினார். உடன் விழுப்புரம் தொகுதி பார்வையாளர், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் புகழ்.செல்வகுமார் ஏற்பாட்டில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, பிரசாத் மாரிமுத்து, அ.ரீகன்ராஜ், குமரன் வெங்கடேசன், திருமுருகன், கோபிநாத் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர் ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.